1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த நிலக்கரி ஆய்வு மேற்கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியிலிருந்து அதை மையமாக வைத்து 4 திசைகளிலும் எவ்வளவு தூரம் அல்லது எவ்வளவு ஆழம் நிலக்கரி உள்ளது என்பதை தோராயமாகவோ அல்லது துல்லியமாகவோ கண்டறியப்பட்டிருந்தால், அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரம் இன்னும் கண்டறியப்படவில்லை. ஆய்வு தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது. ஆய்வு முழுக்க முடிந்த பிறகுதான் அதுபற்றிக் கூற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

252—

ஏலகிரி மலையில் யானைகள் சரணாலயம் அமைத்தல்

*** 19961—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஏலகிரி மலையிலிருந்து யானைகள் நீர் வேண்டி வெள்ளக்குட்டை போன்ற ஊர்களுக்குள் நுழைந்து நாசம் செய்வதைத் தடுக்க சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி மலையிலிருந்து யானைகள் தண்ணீர் அருந்துவதற்காக அருகில் இருக்கும் கிராமங்களுக்குள் வராமல் இருப்பதற்காக ஏலகிரி மலையில் யானைகள் நடமாட்டம் இருக்கும் பகுதிகளைக் கண்டறிந்து அங்கு செயற்கை நீர்நிலைகளை உருவாக்கவும், ஆங்காங்கே உப்பு பாளங்களைப் போடவும், யானைகள் காப்பகத் திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர்நிலைகள் கட்டுமானப்பணி திருப்பத்தூர் மாவட்ட வன அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரணாலயம் அமைக்கும் அளவிற்கு அந்தப் பகுதியில் அதிக எண்ணிக்கையில் யானைகள் இல்லாததாலும். இங்கு வாழும் யானைகள் நிரந்தரமாக ஓரிடத்தில் இல்லாமல் இடம் விட்டு இடம் பெயர்வதாக இருப்பதாலும் சரணாலயம் அமைக்க சாத்தியமில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. ந. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கிற ஏலகிரி மலை என்பது ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகின்ற ஒரு இடமாகும். அந்த இடத்தில் இருக்கக்கூடிய யானைகள் எல்லாம் கோடைக்காலத்தில் தண்ணீர் கிடைக்காமல் பக்கத்தில் இருக்கக்கூடிய கிராமங்களான வெள்ளக்குட்டை, முல்லை, பெத்தூர் போன்ற கிராமங்களுக்குள்ளே நுழைந்து அங்கே இருக்கக்கூடிய பயிர்களான வாழை, நெல், கரும்பு போன்ற பயிர்களை எல்லாம் நாசம் செய்ததுடன், சில மாதங்களுக்கு முன்பு பெத்தூரைச் சேர்ந்த ஒரு நபரை அடித்துக் கொன்று விட்டது. இப்படி கோடைக்காலத்தில் தண்ணீர் கிடைக்காதக் காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய யானைகள் எல்லாம் வெளியே சென்று கிராமங்களில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளின் பயிர்களை எல்லாம் நாசம் செய்து கொண்டிருக்கின்றன. இப்போது அரசு 1 லட்சம் ரூபாயில் ஆங்காங்கே தண்ணீர் நிலையங்களை அமைப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அதற்கான என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, அந்த 1 லட்சம் ரூபாய் என்பது போதாத ஒன்று. ஊட்டிப் பகுதியில் உள்ள முதுமலைக் காட்டிலிருக்கும் சரணாலயம் போன்று பெரிய சரணாலயத்தை நீங்கள் அட்லீஸ்டு ஒரு கோடி ரூபாயாவது செலவு செய்து கட்டுவீர்களானால் அந்த யானைகள் அந்த இடத்தில் வராமல் தடுக்க முடியும். இல்லை என்றால் யானைகள் பொதுவாக நிரந்தரமாக வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நிரந்தரமாக வந்தால் கூட ஓரளவுக்கு நாங்கள் பாதுகாப்பாக இருக்க முடியும். ஆனால் எப்போது அந்த யானைகள் வரும்? எப்போது ஊருக்குள்ளே புகும்? எப்போது யாரை அடிக்கும் என்றே தெரியாத ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே அரசு ஒரு கோடி ரூபாயாவது வைத்து உடனடியாக ஒரு பெரிய நீர் நிலைத் தொட்டியை அந்த இடத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசுக்கு தன்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒதுக்கீடு என்பது எவ்வளவு கோடி என்பது அல்ல; எவ்வளவு சேதம் ஏற்படுகிறதோ; எவ்வளவு பேருக்கு காயங்கள் ஏற்படுகிறதோ; யார், யார் இதன்மூலம் மரணம் அடைகிறார்களோ; அவர்கள் அத்தனை பேருக்கும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வந்த பின்னர்தான் இந்த நஷ்டஈடு கொடுப்பது அல்லது சேதங்கள் நிவர்த்திச் செய்வது என்ற அளவில் சட்டங்களை உருவாக்கியிருக்கிறது. எனவே, யார், யாருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், யார் யாருடைய பொருட்கள் சேதம் ஆனாலும் அவர்களுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டஈடு வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். உயிர்ச் சேதத்திற்கு மட்டும்தான் பெத்தூரைச் சேர்ந்த ஒரு நபருக்கு 10 ஆயிரம் ரூபாயை மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்தில் நான் மனுவைக் கொடுத்து பெற முடிந்ததே ஒழிய, பயிரை நாசம் செய்ததற்கு பல மனுக்கள் கொடுத்தும் இன்னும் எங்களால் நஷ்டஈடு பெறமுடியவில்லை. ஆகவே, நஷ்டஈடு கொடுப்பது என்பது வேறு. ஆனால் என்னுடைய கோரிக்கை எல்லாம் நீங்கள் ஒரு லட்சம் ரூபாயில் ஒரு சிறிய தொட்டி தான் அந்த இடத்தில் கட்ட முடியும். அது பல இடங்களில் பிரிந்திருக்கிறது. காரணம் ஏலகிரி மலை என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். அது ஒரு நீண்ட பகுதி. திருப்பத்தூரின் அந்தப் பக்கத்திலிருந்து ஆரம்பித்து இது முல்லை, ஒன் நாட்டூடு ரெட்டியூர் வரை செல்கிறது. அங்கே இருக்கக்கூடிய பல பகுதிகளை நீங்கள் பிடித்து பல பகுதிகளில் நீங்கள் நீர் நீலைகளைக் கட்டி, அந்த இடத்தில் யானைகள் வெளியே வராமல் பாதுகாப்பதற்கான ஒரு முறையைச் செய்யவேண்டும். காரணம் ஒரு லட்ச ரூபாய் போதாது. ஆகவே அமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்சம் தாராள மனம் கொண்டு இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கி பல இடங்களில் நீர் நிலைத் தொட்டிகளைக் கட்டி யானைகளை ஊருக்குள் வராமல் தடுப்பதற்குப் பாதுகாப்பை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானை தாக்கி ஆட்கள் இறந்தால் ரூபாய் 5,000-மும், காயம் ஏற்பட்டால் காயம் பட்டவர்களுக்கு ரூபாய் 3,500 முதல் 5,000 வரை நஷ்டஈடு வழங்கப்படுகிறது. அதேபோல் யானையால் ஏற்படும் பயிர்

சேதங்களுக்கு அதிகபட்சம் 2,500 ரூபாய் வரை நஷ்டஈடு வழங்கப்படுகிறது. ஆனால் அந்தப் பகுதியில் ஏலகிரிப் பகுதியில் யானை தாக்கி மரணம் ஏற்பட்டவருக்கு நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பு நிகழ்வாக விதியைத் தளர்த்தி அங்கே 10 ஆயிரம் ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் மேலும் யானைகள் அதிகமாக நடமாடும் பகுதிகளுக்கும் கிராமங்களுக்கும் இடையில் தகுந்த வேலி அமைக்கவும் நடப்பு நிதி ஆண்டில் யானைக் காப்பக திட்டத்தின் கீழ் 7.50 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, எந்தப் பகுதியில் யானைத் தாக்கி சேதம் ஏற்படுகிறதோ அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து அந்தப் பகுதிகளில் யானைகள் வராமல் இருப்பதற்காக இரும்பு வேலி அமைப்பதற்குரிய அனைத்துப் பணிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணிகள் முடிக்கப்படுகிற தருணத்தில் இப்படிப்பட்ட விளைவுகள், பயங்கள், ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 253. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

253—

அரசு ரப்பர் தோட்டத்தில் பணிபுரியும் சித்தார் காலனியைச் சேர்ந்தவர்களின் குறைகளை நிவர்த்தி செய்தல்.

* *20242—திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை பார்க்கும் சித்தார் காலனியைச் சார்ந்த மக்களின் வாரிசுகளுக்கு வேலை மறுக்கப்படுவதையும், அவர்கள் தங்கியுள்ள வீட்டைக் காலி செய்யவும் அக்கழகம் வற்புறுத்தி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைகளை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்